# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1,780/20 - 2012 ඔක්තෝබර් 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.10.18

*1,780/20 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

தென் மாகாண முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி, பொறியியல் சேவைகள், சுகாதார, சுதேச வைத்திய மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமாகிய குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாணசபைகள் (நேர் எதிர்விளைவு) சட்டத்தில் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 252 ஆவது அதிகாரம் ஆகிய மாநகர சபைகள் ஆணைச் சட்டத்தின் 289 ஆவது உப பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மாநகர சபை நகராதிபதி, பிரதி நகராதிபதி, உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கான பிரயாணச் செலவுகளுக்கு ஏற்புடையதான கட்டளைகள் இத்தால் விதியாக்கப்படுகின்றது. இக்கட்டளைகள் 2012.01.01 ஆந் திகதி முதல் நடைமுறையாதல் வேண்டும்.

குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா,
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி,
பொறியியல் சேவைகள், சுகாதார, சுதேச வைத்திய
மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும்,
தென் மாகாணம்.

2012, ஒற்றோபர் 10.

**ஒழுங்குவிதி**

1. இவ்வொழுங்குகள் மாநகர சபையின் நகராதிபதிகளுக்கு, பிரதி நகராதிபதிகளுக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு பிரயாணச் செலவுகள் செலுத்தும் ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படும்.

2. மாநகர சபை ஒன்றின் நகராதிபதி ஒருவருக்கு, உப நகராதிபதி ஒருவருக்கு, உறுப்பினர் ஒருவருக்கு சபையினால் ஒப்படைக்கப்படுகின்ற அரச கருமங்கள் நிமித்தம் தமது சொந்த வாகனங்களில் பிரயாணம் செய்கின்ற போது ஏற்படும் செலவுகளை மீளளிக்கப்படுகின்ற வகையில் கீழ்க் குறிப்பிடும் விதத்தில் கிலோ மீற்றர் ஒன்றுக்கு கட்டணம் ஒன்று செலுத்த முடியும் :-

| | | ரூபா. ச. |
|---|---|---|
| (i) | மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி/ஆகியவற்றுக்காக கிலோ மீற்றர் ஒன்றுக்கு | 10.00 |
| (ii) | மிதிவண்டி ஒன்றுக்கு கிலோ மீற்றர் ஒன்றுக்கு | 04.00 |
| (iii) | பொது வாகனங்களுக்காயின் உண்மையாக அதற்கு செலுத்தப்பட்ட பணம். | |

3. அரச கருமங்கள் நிமித்தம் ஏற்படுத்திக் கொண்டது தமக்குச் சொந்தமில்லாத மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி/ மிதிவண்டி ஆகியனவாயின் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவை அதாவது மோட்டார் வண்டி/ முச்சக்கரவண்டி/ மிதிவண்டி தமக்குச் சொந்தமற்றதாக இருப்பின் அவை தமக்குச் சொந்தமானதெனக் கருதி கருமமாற்றல் வேண்டும்.

உரிய மோட்டார் வண்டியின் /முச்சக்கரவண்டியின்/மிதி வண்டியின் –

(i) பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ;

(ii) வருடாந்த வருமான அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(iii) செல்லுபடியாகும் காப்புறுதிச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(iv) உரிமையாளரால் மோட்டார் வண்டியை/முச்சக்கரவண்டியை/மிதி வண்டியை பாவனைக்கு அனுமதித்த சத்தியக் கடதாசி.

4. செலுத்தப்படும் பிரயாணச் செலவுகளின் மொத்தத் தொகையானது நகராதிபதி ஒருவருக்கு, பிரதி நகராதிபதி ஒருவருக்கு, உறுப்பினர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு அதிகூடிய தொகை 3,000 ரூபாவாகும்.

5. மேற்படி பிரயாணச் செலவுகளை செய்யப்படுகின்ற கருமங்களுக்காக சபையின் நகராதிபதியின் முடிவொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்ட கருமங்களாக இருத்தல் வேண்டும். மேலும் அக்கருமங்கள் சபையின் நிர்வாகங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பனவற்றிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

6. பிரயாண (போக்குவரத்து) செலவு நகராதிபதி சம்பந்தப்பட்டதாயிருப்பின் கொடுப்பனவு செலுத்தப்படுகின்ற கருமம் மாநகர சபைகள் சட்டத்தால் அல்லது சபையின் முடிவொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்ட கருமமாக இருத்தல் வேண்டும்.

7. மாநகர சபையின் நகராதிபதி, பிரதி நகராதிபதி அல்லது உறுப்பினர் பிரயாணச் செலவுகளுக்காக விண்ணப்பிக்கும் போது அரச நிதிப் பிரயாணத்தில் குறிப்பிட்டுள்ள பொதுப்படிவம் 161 இன் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். அனைத்துப் பிரயாணச் செலவினங்களையும் செலுத்தப்பட முன்னர் சபையின் உடன்படிக்கையின் மூலம் அனுமதியொன்று பெறல் வேண்டும்.

8. மாநகர சபை ஒன்றின் நகராதிபதி, உப நகராதிபதி உறுப்பினர்கள் ஆகியோர்களுக்காக மீள் நிரப்பல் செய்யப்படும் போக்குவரத்து செலவினங்களுக்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

11- 122/1

---

## அறிவித்தல்

தென் மாகாண முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி, பொறியியல் சேவைகள், சுகாதார, சுதேச வைத்திய மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமாகிய குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவு) சட்டத்தில் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 255 ஆவது அதிகாரம் ஆகிய நகர சபைகள் ஆணைச் சட்டத்தின் 193 (2) ஏ) ஆவது உப பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நகர சபை தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கான பிரயாணச் செலவுகளுக்கு ஏற்புடையதான சட்டவிதிகள் இத்தால் விதியாக்கப்படுகின்றது. இவ்வொழுங்குவிதிகள் 2012.01.01 ஆந் திகதி முதல் நடைமுறையாதல் வேண்டும்.

குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா,
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி,
பொறியியல் சேவைகள், சுகாதார, சுதேச வைத்திய
மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும்,
தென் மாகாணம்.

2012, ஒற்றோபர் 10.

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் நகர சபையின் தலைவருக்கு, உப தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு பிரயாணச் செலவுகள் செலுத்தும் சட்ட விதிகள் என அழைக்கப்படும்.

2. நகர சபை ஒன்றின் தலைவர் ஒருவருக்கு, உப தலைவர் ஒருவருக்கு உறுப்பினர் ஒருவருக்கு சபையினால் ஒப்படைக்கப்படுகின்ற அரச கருமங்கள் நிமித்தம் தமது சொந்த வாகனங்களில் பிரயாணம் செய்கின்ற போது ஏற்படும் செலவுகளை மீளளிக்கப்படுகின்ற வகையில் கீழ்க் குறிப்பிடும் விதத்தில் கிலோ மீற்றர் ஒன்றுக்கு கட்டணம் ஒன்று செலுத்த முடியும் :-

| | | ரூபா ச. |
|---|---|---|
| (i) | மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி ஆகியவற்றுக்காக கிலோ மீற்றர் ஒன்றுக்கு | 10.00 |
| (ii) | மிதிவண்டி ஒன்றுக்கு கிலோ மீற்றர் ஒன்றுக்கு | 04.00 |
| (iii) | பொது வாகனங்களுக்காயின் உண்மையாக அதற்கு செலுத்தப்பட்ட பணம். | |

3. அரச கருமங்கள் நிமித்தம் ஏற்படுத்திக் கொண்டது தமக்குச் சொந்தமில்லாத மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி/மிதிவண்டி ஆகியனவாயின் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவை அதாவது மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி/மிதிவண்டி தமக்குச் சொந்தமற்றதாக இருப்பின் அவை தமக்குச் சொந்தமானதெனக் கருதி கருமமாற்றல் வேண்டும்.

உரிய மோட்டார் வண்டியின் /முச்சக்கரவண்டியின்/மிதி வண்டியின் -

(i) பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ;

(ii) வருடாந்த வருமான அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(iii) செல்லுபடியாகும் காப்புறுதிச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(iv) உரிமையாளரால் மோட்டார் வண்டியை/முச்சக்கரவண்டியை/மிதி வண்டியை பாவனைக்கு அனுமதித்த சத்தியக் கடதாசி.

4. செலுத்தப்படும் பிரயாணச் செலவுகளின் மொத்தத் தொகையானது தலைவர் ஒருவருக்கு, உப தலைவர் ஒருவருக்கு, உறுப்பினர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு அதிகூடிய தொகை 3,000 ரூபாவாகும்.

5. மேற்படி பிரயாணச் செலவுகளை செய்யப்படுகின்ற கருமங்களுக்காக சபையின் தலைவரின் முடிவொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்ட கருமங்களாக இருத்தல் வேண்டும். மேலும் அக்கருமங்கள் சபையின் நிர்வாகங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பனவற்றிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

6. பிரயாண (போக்குவரத்து) செலவு தலைவர் சம்பந்தப்பட்டதாயிருப்பின் கொடுப்பனவு செலுத்தப்படுகின்ற கருமம் சபையின் நகர சபைகள் சட்டத்தால் அல்லது சபையின் முடிவொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்ட கருமமாக இருத்தல் வேண்டும்.

7. நகர சபையின் தலைவர், உப தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவருக்கு பிரயாணச் செலவுகளுக்காக விண்ணப்பிக்கும் போது அரச நிதிப் பிரயாணத்தில் குறிப்பிட்டுள்ள பொதுப்படிவம் 161 இன் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். அனைத்துப் பிரயாணச் செலவினங்களையும் செலுத்தப்பட முன்னர் சபையின் உடன்படிக்கையின் மூலம் அனுமதியொன்று பெறல் வேண்டும்.

8. நகர சபை ஒன்றின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர்களுக்காக மீள் நிரப்பல் செய்யப்படும் போக்குவரத்து செலவினங்களுக்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

**அறிவித்தல்**

தென் மாகாண முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி, பொறியியல் சேவைகள் சுகாதார, சுதேச வைத்திய மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமாகிய குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவு) சட்டத்தில் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 184 ஆவது பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பிரதேச சபை தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கான பிரயாணச் செலவுகளுக்கு ஏற்புடையதான சட்டவிதிகள் இத்தால் விதியாக்கப்படுகின்றது. இச்சட்டவிதிகள் 2012.11.01 ஆந் திகதி முதல் நடைமுறையாதல் வேண்டும்.

குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா,
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி,
பொறியியல் சேவைகள், சுகாதார, சுதேச வைத்திய
மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும்,
தென் மாகாணம்.

2012, ஒற்றோபர் 10.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் பிரசேத சபையின் தலைவருக்கு, உப தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு பிரயாணச் செலவுகள் செலுத்தும் சட்ட விதிகள் என அழைக்கப்படும்.

2. பிரதேச சபை ஒன்றின் தலைவர் ஒருவருக்கு, உப தலைவர் ஒருவருக்கு உறுப்பினர் ஒருவருக்கு சபையினால் ஒப்படைக்கப்படுகின்ற அரச கருமங்கள் நிமித்தம் தமது சொந்த வாகனங்களில் பிரயாணம் செய்கின்ற போது ஏற்படும் செலவுகளை மீளளிக்கப்படுகின்ற வகையில் கீழ்க் குறிப்பிடும் விதத்தில் கிலோ மீற்றர் ஒன்றுக்கு கட்டணம் ஒன்று செலுத்த முடியும் :-

| | | ரூபா ச. |
|---|---|---|
| (i) | மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி ஆகியவற்றுக்காக கிலோ மீற்றர் ஒன்றுக்கு | 10.00 |
| (ii) | மிதிவண்டி ஒன்றுக்கு கிலோ மீற்றர் ஒன்றுக்கு | 04.00 |
| (iii) | பொது வாகனங்களுக்காயின் உண்மையாக அதற்கு செலுத்தப்பட்ட பணம். | |

3. அரச கருமங்கள் நிமித்தம் ஏற்படுத்திக் கொண்டது தமக்குச் சொந்தமில்லாத மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி/மிதிவண்டி ஆகியனவாயின் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவை அதாவது மோட்டார் வண்டி/முச்சக்கரவண்டி/மிதிவண்டி தமக்குச் சொந்தமற்றதாக இருப்பின் அவை தமக்குச் சொந்தமானதெனக் கருதி கருமமாற்றல் வேண்டும்.

உரிய மோட்டார் வண்டியின் /முச்சக்கரவண்டியின்/மிதி வண்டியின் -

(i) பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ;

(ii) வருடாந்த வருமான அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(iii) செல்லுபடியாகும் காப்புறுதிச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(iv) உரிமையாளரால் மோட்டார் வண்டியை/முச்சக்கரவண்டியை/மிதி வண்டியை பாவனைக்கு அனுமதித்த சத்தியக் கடதாசி.

4. செலுத்தப்படும் பிரயாணச் செலவுகளின் மொத்தத் தொகையானது தலைவர் ஒருவருக்கு, உப தலைவர் ஒருவருக்கு, உறுப்பினர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு அதிகூடிய தொகை 3,000 ரூபாவாகும்.

5. மேற்படி பிரயாணச் செலவுகளை செலுத்தும் போது செய்யப்படுகின்ற கருமங்களுக்காக சபையின் தலைவரின் முடிவொன்றின் மூலம் தத்துவமளிக்கப்பட்ட கருமங்களாக இருத்தல் வேண்டும். மேலும் அக்கருமங்கள் சபையின் நிர்வாகங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பனவற்றிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

6. பிரயாண (போக்குவரத்து) செலவு தலைவர் சம்பந்தப்பட்டதாயிருப்பின் கொடுப்பனவு செலுத்தப்படுகின்ற கருமம் சபையின் பிரதேச சபைகள் சட்டத்தால் அல்லது சபையின் முடிவொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்ட கருமமாக இருத்தல் வேண்டும்.

7. பிரதேச சபையின் தலைவர், உப தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவருக்கு பிரயாணச் செலவுகளுக்காக விண்ணப்பிக்கும் போது அரச நிதிப் பிரயாணத்தில் குறிப்பிட்டுள்ள பொதுப்படிவம் 161 இன் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். அனைத்துப் பிரயாணச் செலவினங்களையும் செலுத்தப்பட முன்னர் சபையின் உடன்படிக்கையின் மூலம் அனுமதியொன்று பெறல் வேண்டும்.

8. பிரதேச சபை ஒன்றின் தலைவர், உப தலைவர் உறுப்பினர்கள் ஆகியோர்களுக்காக மீள் நிரப்பல் செய்யப்படும் போக்குவரத்து செலவினங்களுக்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

11- 122/3

---

திருத்தம்

தென் மாகாண முதலமைச்சரும், உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருமாகிய சான் விஜயலால் த சில்வா ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (நேர் எதிர் விளைவுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 184 ஆவது பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஆக்கம் செய்யப்பட்டு 1413/15 ஆம் இலக்கமுடைய 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 5 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் IV (அ) பிரிவில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர்களின் கொடுப்பனவுகளுக்கு ஏற்புடைய சட்ட விதிகளின் 3 (1) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள "மாநகர சபைகள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பிரதேச சபைகள்" என்ற சொற்களைப் பதிலாக்குவதால் குறித்த பந்தி கீழ்க்காணும் விதத்தில் திருத்தப்படுகின்றது.

3 (1) கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபைகளின் தலைவர் ஒருவருக்கு உப தலைவர் ஒருவருக்கு அல்லது உறுப்பினர் ஒருவருக்கு மேற்கண்ட கொடுப்பனவுகள் சம்பந்தமாக உரிமை கிடைப்பதில்லை.

சான் விஜயலால் டீ சில்வா,
முதலமைச்சரும் நிதி, மற்றும் உள்ளூராட்சி
விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும்,
தென் மாகாணம்.

2012, செத்தெம்பர் 28.

11- 159

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

2 - PG 001405